கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 07 அக்டோபர் 2022 விலை ரூ.25/-



# உள்ளடக்கம்


கட்டுரை

புதியமாதவி 12
ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் 23
சா.தேவதாஸ் 64

சிறுகதை

கார்த்திக் கிருபாகரன் 06
அகராதி 19
ஆர். வத்ஸலா 39
கபிலன் சசிகுமார் 46
தி தா நாராயணன் 51
வாசுதேவன் அருணாச்சலம் 58

கவிதை

ந.சிவநேசன் 11
வலங்கைமான் நூர்தீன் 18
ப.அ.ஈ.ஈ.அய்யனார் 22
ச. அஜித்குமார் 44
தி.கலையரசி 45
இளையவன் சிவா 45
நெய்வேலி பாரதிக்குமார் 50
அன்றிலன் 57
ச.ஆனந்தகுமார் 63
ரகுநாத் வ 66


கடைசிப் பக்கம்

இந்திரா பார்த்தசாரதி 67


**வணக்கம்**

கணையாழி தற்போது மின்னிதழாக மட்டும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அன்புகூர்ந்து www.kanaiyazhi.com அல்லது magzter.com பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி அனுப்பலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.



சிறுகதை
வாசுதேவன் அருணாசலம்

# சாருக்கு கிட்னி வச்சியா?

“ஏய்! ராமு! சாருக்கு கிட்னி வச்சியா? உள்ள அடுப்புக்குப் பின்னாடி ஒரு சம்படத்திலெ எலையப் போட்டு மூடி வச்சிருக்கேன். எடுத்துட்டுவந்து சாருக்கு வைடா. விதையையும் சுட்டு வச்சிருக்கேன். அதுவும் வேணுமானு கேட்டு வைய்யுடா. போ... போய் எடுத்துக்கிட்டு வா ” என்று கொஞ்சம் தாழ்ந்த குரலில் ராமுவின் காதோரம் சொன்னாள் மதுரம். “ஏம்மா, மொதல்லையே சொல்லல... அவரு முடிச்சிடப்போறாரு” என்று ராமுவும் அதே தாழ்ந்த குரலில் கடிந்தான். “மறந்துட்டேன்டா! போய் சீக்கிரம் எடுத்துட்டுவா! அவர எழுந்திரிக்கவிடாம நான் பாத்துக்கிறேன்” என்று மதுரம் வீட்டின் முற்றத்தில் போடப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்றுக்கொண்டிருந்த பந்திக்கு விரைந்தாள். தனி மேஜையின் முன்னிருந்த பிரம்பு நாற்காலியில் அன்புச்செல்வன் அமர்ந்திருந்தார். மேஜை மீதிருந்த பெரிய தலைவாழை இலையில் அசைவ உணவுவகைகள் அனைத்தும் பரிமாறப்பட்டிருந்தது. அன்புச்செல்வன் நிதானமாக வழக்கமான பரபரப்புமின்றி சுவைத்துச் சுவைத்து உள்ளே ஒவ்வொன்றாய் இறக்கிக்கொண்டிருந்தார். மதுரம் அவருடைய மேஜையின் அருகில் வந்தாள். “சார், கிட்னி கொண்டுவரச் சொல்லியிருக்கேன். உங்களுக்குன்னு தனியா எடுத்து வைச்சிருந்தேன். ராமு எடுத்துட்டு வர்றான். எதுவும் எழுந்திருச்சிடாதீங்க. விதையையும் நல்லா வாட்டி சுட்டு வச்சிருக்கேன். நல்லாயிருக்கும். சாப்பிடுங்க” என்றாள். தலையை மட்டும் ஆடு ஆட்டுவதைப் போல் ஆட்டிவிட்டு இலையின் வலது ஓரத்தில் சிறிதாகக் குவிக்கப்பட்டிருந்த மட்டன் சுக்காவிலிருந்து மூன்று விரல்கள் கொள்ளும் அளவிற்கு எடுத்து வாயில் போட்டுக்கொண்டு மென்று தின்ன ஆரம்பித்தார் அன்புச்செல்வன்.

★★★

“எம்மா! உச்சா போயிகிட்டே இருக்கு! நிறுத்த மாட்டேங்குது!” வீட்டிற்கு வலதுபுறமாக இருந்த பொட்டலில் போடப்பட்டிருந்த ஆட்டுப்பட்டியிலிருந்து கத்தினான் ராமு. “எதுடா?” என்றாள் மதுரம் வீட்டிற்குள் இருந்தபடியே.

அரசு வழங்கிய உதவித்தொகையில்தான் அந்தச் சிறிய வீட்டை பெதப்பம்பட்டியில் பொள்ளாச்சி சாலையருகே மதுரம் கட்டியிருந்தாள். அங்கிருக்கும் அரசு உயர்நிலைப்பள்ளியில்தான் ராமு பதினொன்றாம் வகுப்பு படித்து வருகிறான். “இந்த வெள்ளையன்தாம்மா!” என்று மீண்டும் கத்தினான் ராமு. “பொறுடா! வர்றேன்” என்று பதில் சொல்லிக்கொண்டே வெளியே வந்தாள் மதுரம். அவளுடைய கணவன் முருகப்பன் இறந்து முழுமையாக இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. கடந்த வருடம்தான் மூத்தமகள் கோகிலாவை தென்சேரியிலிருக்கும் தனது அண்ணன் மகன் பாஸ்கருக்குத் திருமணம் செய்து வைத்திருந்தாள். “முன்னங்கால தூக்கிப்பிடிடா?” என்று சொல்லிக்கொண்டே ஆட்டுப்பட்டிக்குள் நுழைந்தாள் மதுரம். முருகப்பனின் இறப்பிற்குபின் ஒரே துணை ராமுவும் அவள் வளர்க்கும் ஆடுகளும்தான். “நல்லா தூக்குடா!” என்று அதட்டினாள் மதுரம். வெள்ளையனின் ஆண் உறுப்பை கையில் மெதுவாக அழுத்திப் பார்த்தாள். கையில் பட்ட ஈரத்தை உதறி சேலையில் துடைத்துக்கொண்டாள். வெள்ளையன் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அமைதியாக இருந்தான். இரத்த அழுத்தத்தை அளவிட இடது உள்ளங்கைக்குள் அடக்கி அழுத்தும் சிறிய நீண்ட மெருதுவான ரப்பர் கருவியை மருத்துவர்கள் அழுத்துவதுபோல் மதுரம் வெள்ளையனின் விதைப்பையை அழுத்தினாள். வெள்ளையன் சிறிதாக வீறிட்டுக் கத்தினான். “விதையிலதான் ஏதோ பிரச்சனைடா. ஆஸ்பத்திரிக்கு போயிட்டு வந்திடு. இன்னைக்கு பதினோறு மணிவரைக்கும் இருப்பாங்க. போயி பார்த்துட்டு வந்திடு. புதுசா வந்திருக்கிற டாக்குட்டரு நல்லா பாக்குறாருனு முசுடு கிளவிதான் சொல்லுச்சுடா. போயிட்டு வந்திடு” என்றாள் மதுரம்.

“இப்படி மொத்தமா கூட்டமா வந்து இங்க நிக்கக்கூடாது. இந்தா நீ மொத டேபிளுக்குப் போ. நீ இந்த டேபிளுக்கு வா. நீ இரண்டாவது டேபிளுக்குப் போ. அந்த ஆட்டை மூணாவது டேபிளுக்குக் கூட்டிக்கிட்டுப்போ. சேவல நாலாவது டேபிளுக்குத் தூக்கிட்டுப்போ. டோக்கன் போடலேன்னா முன்னாடிபோயி டோக்கன போட்டுட்டு வாங்க. சுரேஷு ஒரு ஐவி செட்டும் என் எஸ்ஸையும் எடுத்துட்டுவா. கூட ஒரு பட்டர்ஃப்லை பிளாக் நீடில் ஒன்னையையும் சேத்து எடுத்துட்டுவா” என்று மடமடவென்று கட்டளைகளை அள்ளி எறிந்துவிட்டு, துணிப்பையைத் தூக்கிக்கொண்டு நின்ற ஒரு பெரியவரிடம் சென்றார் அன்புச்செல்வன், பெதப்பம்பட்டி அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப்பேராசிரியர். “இங்க படுக்கவைங்க” என்ற அன்புச்செல்வனின் வார்த்தைகள் தந்த பதற்றத்தோடு அந்தப் பெரியவர் துணிப்பைக்குளிருந்து ஒரு கருப்புப்பூனை ஒன்றை தனது வலது கையில் தூக்கினார். பூனையின் உடம்பு துவண்டு தலையும் பின்உடம்பும் தூக்கிப்பிடித்திருந்த கையில் இரண்டு முனைகளிலிருந்தும் வழிவதுபோல் இருந்தது. அங்கிருந்த மேஜையின் மீது மெல்ல வைத்தார். துணிபோல் துவண்டு கிடந்தது. மேல் முன்னங்காலை மெல்ல கையில் எடுத்து அதனுடைய விளிம்பை தனது இரண்டு விரல்களால் மூன்று நான்குமுறை வருடி, மெல்லிய நரம்பை தென்படவைத்தார் அன்புச்செல்லவன். “சீக்கிரம் கொண்டுவா” என்று சுரேஷிடம் கத்தினார். சுரேஷ் ஓடிவந்தான். “சீக்கிரம் ஐவி லைன்ன போடு” என்றார் அன்புச்செல்வன். பட்டர்ஃப்ளை ஊசியை அன்புச்செல்வனிடம் நீட்டினான் சுரேஷ். அதை வாங்கிய அன்புச்செல்வன் தன் கை பற்றியிருந்த பூனையின் காலில் மெதுவாக நரம்பிற்குள் எறிவதுபோல் போட்டார்.

சரியான இடத்தில் ஊசி பாய்ந்து இரத்தம் மெல்லிய வால்போலிருந்த பட்டர்ஃப்ளை ஊசியின் ரப்பர் குழாய் வழியாக வழிய ஆரம்பித்தது. சட்டென்று சுரேஷிடம் ஐவி லைன்னை வாங்கி பட்டர்ஃப்லை ஊசியின் ரப்பர் குழாயுடன் இணைத்தார். மருந்து ஐவி ஸ்டேண்டில் மாட்டப்பட்டிருந்த பாட்டிலிலிருந்து பூனையின் உடம்பிற்குள் மெல்ல இறங்க ஆரம்பித்தது. "இந்தக் காலை மட்டும் கொஞ்சம் அழுத்தம் கொடுக்காம பிடிச்சுக்குங்க... போதும்" என்று அங்கிருந்து நகர்ந்தார். இரண்டாவது மேஜையின் அருகே ஓர் இளைஞன் நாய்க்குட்டி ஒன்றை, பிறந்த குழந்தையை கையில் தூக்கிவைத்திருப்பதுபோல் வைத்து நின்றுகொண்டிருந்தான். "டேபிள் மேல வைய்யி. என்ன ஆச்சு" என்றார் அன்புச்செல்வன். மெல்ல மேஜையின்மீது நாய்க்குட்டியை வைத்துவிட்டு "இரண்டுநாளா எதுவும் சாப்பிடலீங்க சார். கருப்பா கழிஞ்சு ஆய்யி போகுதுங்க சார்" என்றான் அந்த இளைஞன். "கருப்பா போகுதா? ஸ்மெல் எப்படி இருந்தது?" என்றார் அன்புச்செல்வன். "சார்... கொஞ்சம் தாங்கமுடியலீங்க..." என்று இளைஞன் சொல்லி முடிப்பதற்கு முன்பே, "தூக்கு! தூக்கு!... சுரேஷூ பார்வோ வார்ட்டுக்கு கூட்டிக்கிட்டு போ! டோக்கன் போடும்போது இதெல்லாம் கேட்கலையா நீய்யி! கிளம்பு. கிளம்பு. சங்கர வரச்சொல்லு" என்று விரட்டாத குறையாக அங்கிருந்து சுரேஷையும் அந்த இளைஞனையும் விரட்டினார். "ஏய்! சீக்கிரம் வா!" என்று அதட்டி அந்த இளைஞனை அங்கிருந்து அழைத்துச் சென்றான் சுரேஷ். அன்புச்செல்வன் மூன்றாவது டேபிளுக்குச் சென்றார். ராமு வெள்ளையனை முறுக்குக்கயிற்றில் பிணைத்து, தனது அருகில் நிற்கவைத்திருந்தான். "என்ன... என்ன ஆச்சு. மொதல்ல தூக்கி டேபிள்மேல வைய்யி" என்று அதட்டினார். ராமு வெள்ளையனைத் தூக்கமுடியாமல் தூக்கி மேஜையின்மீது போட்டான். வெள்ளையன் மேஜையின் வழுவழுப்பான தளத்தில் நிற்கமுடியாமல் கால்கள் இழுக்க தள்ளாடி நின்றான். ராமு மெல்ல அணைத்துப்பிடித்துக்கொண்டான். "சொல்லு!" என்றார் அன்புச்செல்வன். "உச்சா போய்கிட்டேயிருக்குங்க சார்" என்றான் ராமு. "உச்சாவா!... மூத்திரமா?" முகத்தில் வெடிக்க வெளியேறிய புன்னகையை அழுத்தி அடைத்துக்கொண்டே கேட்டார் அன்புச்செல்வன். "ஊத்திக்கிட்டே இருக்குங்க சார்" என்றான் ராமு. அருகில் சங்கர் வந்து நின்றான். "போய் ஒரு க்ளவ் எடுத்துட்டுவா" என்றார். சில வினாடிகளில் சங்கர் ஒரு மெல்லிய ரப்பர் கையுறையுடன் வந்தான். அதை இடது கையில் மாட்டிக்கொண்டு வெள்ளையனின் ஆண்குறியை கையால் அழுத்திப் பார்த்தார். பின் அவனுடைய விதையையும் மெல்ல அழுத்திப்பிடித்துப் பார்த்தார். வெள்ளையன் மெல்ல இருந்த இடத்திலிருந்து நகர முயன்றான். "எப்பயிருந்து இப்படி போகுது" என்றார் அன்புச்செல்வன். "இன்னிக்கு காலேலதான் பாத்தேன் சார்," என்றான் ராமு. "ஸ்டோன் இரிட்டேஷன்மாதிரிதான் தெரியுது. தொடர்ந்து மூணுநாளைக்கு வரணும். வந்து ட்டிரிப்ஸ் போட்டுட்டு போகணும். சரியாயிடும். அப்படியில்லேனா ஸ்கேன் பண்ணித்தான் பாக்கணும். வெயிட் பண்ணிப் பாப்போம்" என்று ராமுவிடம் தெரிவித்து, "என் எஸ்ஸை எடுத்துட்டுவந்து போடு. எல்லோ பட்டர்ஃப்ளை நீடில எடுத்துட்டு வா. ஜென்டாமைசின் ஒன் சிசி" என்று சங்கரிடம் சொல்லிவிட்டு அடுத்த மேஜைக்கு நகர்ந்தார் அன்புச்செல்வன். சிறிது நேரத்தில் சங்கர் ஐ வி ஸ்டேண்டில் ஒரு அரைலிட்டர் பாட்டிலைத் தலைகீழாகத் தொங்க விட்டான். ராமுவிடம் கையில் கொண்டுவந்த புதிய

கவரிலிருந்த பிரிக்கப்படாத மஞ்சள் நிற பட்டர்ஃப்லை ஊசியையும் இளஞ்சிவப்புநிற மருந்து ஏற்றப்பட்டு ஊசியின் மூடி பொருத்தப்பட்ட ஸிரின்ஞ் ஒன்றையும் ராமுவிடம் பிடிக்கக் கொடுத்து, அடுத்த மேஜையில் சேவலின் காலில் ஏற்பட்ட காயத்தைப் பரிசோதித்துக்கொண்டிருந்த அன்புச்செல்வன் அருகில் சென்று நின்றான். “ஆட்டுக்கு லைன் போட்டுட்டியா?” என்று திரும்பினார். ”பண்ணிட்டேன் சார்” என்றான் சங்கர். அங்கிருந்து மீண்டும் ராமு இருந்த மூன்றாவது மேஜைக்கு வந்தார். ராமுவின் கையிலிருந்ததைப் பார்த்தவுடன் சங்கரிடம் திரும்பி, “உனக்கு அறிவுங்கிறதே கிடையாதா! எத்தன தடவ சொல்றது. மெடிஸின பேஷண்ட் ஹால்டர்ஸ்ட்ட கொடுக்காதேனு. ஏன் உனக்கு கையில வச்சுக்கிற முடியாதா! அவென் ஆட்டப்பிடிப்பானா நீ கொடுக்கிறதைப் பிடிச்சிக்கிட்டு நிப்பானா! சொல்லுறத கொஞ்சமாவது மண்டைல ஏத்திக்க! புரியுதா?” என்று பொரிந்து தள்ளினார் அன்புச்செல்வன். “சாரிங்க சார்” என்று தலையைக் கவிழ்த்தியபடி சொன்னான் சங்கர். ராமுவின் கையிலிருந்த புதிய, கவர் பிரிக்கப்படாத எல்லோ பட்டர்ஃப்ளை நீடிலை வாங்கி, பிரித்தார். “படுக்க வெய்யி” என்றார் ராமுவிடம். ராமு வெள்ளையனின் முதுகை கொஞ்சம் அழுத்தி கால்களைத் தன்பக்கம் இழுக்க, தடாலென்று மேஜைமீது விழுந்து படுத்தான் வெள்ளையன். “கழுத்தைக் கொஞ்சம் நிமித்தி அசைக்காம பிடி. டேபிளுக்கு அந்தப் பக்கம் போய் பிடி” என்று ராமுவிற்குக் கட்டளையிட்டார் அன்புச்செல்வன். ராமுவும் அப்படியே செய்தான். வெள்ளையனின் கழுத்துக்குக் கீழே தன்னுடைய இரண்டு விரல்களால் மூன்று நான்கு முறை வாரி நரம்பின் தடத்தை உணர்ந்து, மெல்ல எறிவதுபோல் ஊசியைச் செலுத்தினார். முதல் முயற்சியிலேயே நரம்பு கிடைத்துவிட்டது. ஐ.வி லைன் இணைத்து மருந்து வெள்ளையனின் உடலுக்குள் செல்வதை உறுதி செய்தார். பின் இளஞ்சிவப்பு நிற மருந்து ஏற்றப்பட்டிருந்த ஸிரின்ஞ் ஊசிமூடியை அவிழ்த்து, ஐ.வி லைன் எல்லோ பட்டர்ஃப்ளை ஊசி சேரும் இணைப்பிலிருந்த தடித்த ரப்பர் குழாயில் ஊசியைச் செருகிச் சிறிது சிறிதாக மருந்தைச் செலுத்தி முடித்தார். “அசைக்காம பிடி!” என்று ராமுவிடம் மீண்டும் சொல்லிவிட்டு “சங்கர், சரியா ஒன் ஃபிவ்ட்டி சிசி மட்டும் இறங்கட்டும். அப்புறம் லைன்ன எடுத்திடு. மறந்திட்டு அங்கிட்டு இங்கிட்டு ஓடிக்கிட்டு இருக்கக்கூடாது. ஷார்ப்பா இருக்கணும். எல்லாம் பாவப்பட்ட உயிர்க! புரியுதா!” என்று கடிந்துகொண்டு காலில் அடிபட்டிருந்த சேவலைப் பார்க்கச் சென்றார் அன்புச்செல்வன். சரியாக இருபது நிமிடங்களுக்குப்பின் ராமு நின்றிருந்த மேஜைக்கு வந்தார். சங்கர் அங்கே ஐ வி லைன்னை நிறுத்துவதற்கு நின்றுகொண்டிருந்தான். அன்புச்செல்வனே ஐ வி லைன்னை நிறுத்தி ஊசியை வெள்ளையனின் கழுத்து நரம்பிலிருந்து எடுத்தார். கழுத்தில் போட்டிருந்த ஸ்டெத்தஸ் கோப்பை எடுத்து வெள்ளையனின் மார்பிலும் அடிவயிற்றுப் பகுதியிலும் பரிசோதித்துவிட்டு நிமிர்ந்தார். “சொன்னது ஞாபகமிருக்கா? நாளைக்கு வந்து இதேமாதிரி போட்டுட்டு போ. சும்மா சரியாயிடுச்சுனு வராம இருந்தினா அடுத்து எதுக்கும் வரக்கூடாது. என்ன புரியுதா? மூணுநாளைக்கு இதே மாதிரி போட்டாதான் ஸ்டோன் வெளியவரும். அப்பாதான் சரியாகும். என்ன, வருவியா? இல்ல ஆடுதானே தொலையுதுன்னு விட்டிடுவியா?” என்று மீண்டும் சொல்லி, நக்கலடித்தார் அன்புச்செல்வன். ”இல்லீங்க சார், கட்டாயம் எங்கம்மா தூக்கிக்கிட்டு வந்திடும், சார்” என்றான் ராமு. “சாரு,

நாளைக்கு எந்த மீட்டிங்க்குப் போறீங்க!" என்று தனக்கே உரிய பாணியில் ஸ்டெத்தஸ் கோப்பை இருகைகளின் விரல்களை மட்டும் சுண்டியசைத்து தலைக்குமேல் தூக்கி தோளில் போட்டபடி நையாண்டி செய்தார். "ஸ்கூலுக்குங்க, சார். எங்கம்மா கட்டாயம் தூக்கிக்கிட்டு வந்திடும் சார்" என்றான் ராமு. "ஓ! ஸ்கூலுக்கு போறீயா! ஏன்... அப்பா?" என்று தன் நையாண்டியைத் தவறென்று உணர்ந்தவர்போல் ராமுவிடம் கேட்டார். "அப்பா இரண்டு வருசத்துக்கு முன்னாடி தவறிட்டாருங்க, சார்" என்றான் ராமு. "ஓ! சாரி!... நாளைக்குக் கூட்டிக்கிட்டு வந்திடு" என்று கூறி அங்கிருந்து நகர முயன்ற அன்புச்செல்வனிடம் "தேங்ஸ்ஸுங்க சார்" என்றபடி வெள்ளையனை மேஜையிலிருந்து வாரித்தூக்கிக்கொண்டு வெளியேறினான் ராமு.

அடுத்த இரண்டு நாட்களுக்கு மதுரம்தான் வெள்ளையனைத் தூக்கி வந்தாள். மருந்துகள் வெள்ளையனின் உடம்பில் ஏற்றப்பட்டன. ராமுவிடம் காட்டிய நக்கலை மதுரத்திடம் அன்புச்செல்வன் காட்டவில்லை. மிகவும் அன்பாகவே பேசினார். மூன்றாம் நாளன்று மதுரத்திடம் எந்தெந்த இலைதழைகளைக் கொடுக்க வேண்டும், எவற்றையெல்லாம் கொடுக்கக் கூடாது என்று பட்டியலிட்டு விளக்கிச் சொன்னார். மீண்டும் ஏதாவது தொந்தரவு என்றால் அழைத்துவரும்படியும், மீயொலி ஆய்வு செய்து பார்த்து மருந்துகள் வழங்கலாம் என்றும் கூறி வெள்ளையனையும் மதுரத்தையும் அனுப்பி வைத்தார். அடுத்த இரண்டு மாதத்தில் நான்கு ஆட்டுக்குட்டிகளுக்கு வைத்தியம் பார்ப்பதற்கு ராமுவும் மதுரமும் மாறிமாறித் தூக்கிவந்தனர். அன்புச்செல்வன் மற்றவர்களிடம் வழக்கமாகக் காட்டும் கண்டிப்பையும் இவர்களிடம் காட்டவில்லை, தடித்த வார்த்தைகளையும் இவர்களிடம் கொட்டவில்லை. அனைவருக்குமே ஆச்சரியமாகவே இருந்தது. ராமு வரும்போதெல்லாம் அவனுடைய படிப்பைப்பற்றிக் கேட்க அன்புச்செல்வன் மறப்பதில்லை. வைத்தியம் பார்க்கப்பட்ட மற்ற ஆட்டுக்குட்டிகளைப் பற்றி மதுரத்திடம் விசாரிக்காமல் இருக்கமாட்டார் அன்புச்செல்வன்.

மதுரத்தின் மூத்தமகள் கோகிலாவினுடைய ஒருவயது மகளுக்கு காதுகுத்து ஏற்பாடுகள் தென்சேரிமலை கோயிலின்மேற்கு அடிவாரத்திலிருந்த தோட்டத்து வீட்டில் செய்யப்பட்டிருந்தன. ராமுவும் மதுரமும் கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சென்று அன்புச்செல்வனைப் பிரத்தியேகமாக அழைத்திருந்தனர். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வெளிநோயாளிகளைப் பார்ப்பதற்கான நேரம் காலையில் சீக்கிரமே முடிந்துவிட்டது. மதியம் ஒரு மணிக்குத் தனது இருசக்கர வாகனத்தில் தென்சேரிமலைக்குக் கிளம்பினார் அன்புச்செல்வன். தோட்டத்தின் நுழைவாயிலுக்கே வந்து அனைவரும் அன்புச்செல்வனை வரவேற்றனர்.

"நீங்க எதுவும் வராமப் போயிடுவீங்களோன்னு பயந்துட்டேன், சார்" என்றான் ராமு. "அம்மாவ சங்கடப்படுத்த வேணாம்னுதான் வந்துட்டேன்" என்றார் அன்புச்செல்வன். மதுரம் எடுத்து வரச்சொன்ன சம்புடத்துடன் ராமு அன்புச்செல்வனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தான். "வெள்ளையன் எப்படி இருக்கான் ராமு?" என்று வினவினார் அன்புச்செல்வன். சில வினாடிகளின் மௌனத்திற்குப்பின். "இன்னும் கொஞ்சம் கிட்னி வைக்கிறேன். சாப்பிடுங்க சார்" என்று பதில் சொன்னான் ராமு.

vasuaruntamil@gmail.com ■